**இறுதி சுற்றுப் பாதையை சென்றடைந்தது**

# நிலவில் சந்திரயான் தரையிறங்க ஆயத்த பணி இன்று தொடக்கம்

● சென்னை

நிலவை ஒட்டிய இறுதி சுற்றுப் பாதைக்கு சந்திரயான்-3 விண்கலம் வெற்றிகரமாக மாற்றப்பட்டுள்ளது. திட்டமிட்டபடி விண்கலத்தை நிலவில் தரையிறக்குவதற்கான ஆயத்த பணி இன்று முதல் தொடங்கும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ரூ.615 கோடியில் வடிவமைத்த சந்திரயான்-3 விண்கலம், ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த ஜூலை 14-ம் தேதி எல்விஎம்-3 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது. ஆக.1-ம் தேதி பூமியின் ஈர்ப்பு விசையில் இருந்து விலக்கப்பட்டு, நிலவை நோக்கி செல்லும் வகையில் அதன் பயணப் பாதை மாற்றப்பட்டது. 5 நாள் பயணத்துக்கு பிறகு ஆக.5-ம் தேதி நிலவின் சுற்றுப் பாதைக்குள் சந்திரயான் நுழைந்தது. தொடர்ந்து நிலவின் சுற்றுப் பாதையில் விண்கலம் தற்போது வலம் வருகிறது.



நிலவில் இருந்து 4,400 கி.மீ. உயரத்தில் வலம்வந்தபோது, லேண்டரின் எல்எச்விசி கேமரா மூலம் எடுக்கப்பட்ட நிலவின் படத்தை இஸ்ரோ நேற்று வெளியிட்டது. அதில் டைசன், கிராமர்ஸ், பாக்சோபட், கூலும், வைர் ஆகிய பள்ளங்கள் நன்கு தெரிகின்றன.

நிலவில் விண்கலம் மெதுவாக தரையிறங்கும் வகையில், சந்திரயான் சுற்றுப் பாதை உயரத்தை படிப்படியாக குறைக்கும் பணியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். நிலவை ஒட்டிய இறுதிகட்ட சுற்றுவட்டப் பாதையில் விண்கலத்தை கொண்டு செல்லும் பணி நேற்று காலை 8.30 மணிக்கு மேற்கொள்ளப்பட்டது. விண்கலத்தில் இருந்த திரவ வாயு இயந்திரம் இயக்கப்பட்டு, வெற்றிகரமாக அதன் சுற்றுவட்டப் பாதை மாற்றியமைக்கப்பட்டது. தற்போது நிலவின் தரைப் பகுதியில் இருந்து குறைந்தபட்சம் 153 கி.மீ. தூரம், அதிகபட்சம் 163 கி.மீ. தூரம் கொண்ட சுற்றுவட்டப் பாதையில் விண்கலம் நிலவை சுற்றி வருகிறது.

இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியபோது, "நிலவில் தரையிறங்க உள்ள லேண்டரை நிலவின் சுற்றுப் பாதைக்கு கொண்டு செல்லும் பணியை உந்துவிசை கலன் திட்டமிட்டபடி செய்துவிட்டது. நிலவை சுற்றிவரும் உந்துவிசை கலன் ஆக.17-ல் (இன்று) நிலவின் தரைப் பகுதிக்கு நெருக்கமாக வரும்போது, அதில் இருந்து லேண்டர் தனியே பிரிந்துவிடும். அடுத்த சில நாட்களில் லேண்டர் கலன் சுற்றுப் பாதையில் இருந்து விலக்கப்பட்டு, நிலவை நோக்கி செல்லுமாறு அதன் பயணப் பாதை மாற்றப்படும்" என்றனர்.

### 18 பாரம்பரிய தொழில் கலைஞர்களின் நலனுக்காக

# ரூ.13,000 கோடியில் 'பிஎம் விஸ்வகர்மா'

● **பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில் புதிய திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் 169 நகரங்களில் 10,000 புதிய மின்சார பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.**

● **புதுடெல்லி**

தச்சர், பொற்கொல்லர், காலணி தைப்பவர், தையல் கலைஞர் உள்ளிட்ட 18 முக்கிய பாரம்பரிய தொழில் கலைஞர்களுக்கு ரூ.13,000 கோடி மதிப்பில் கடனுதவி, திறன்மேம்பாடு அளிக்கும் 'பிஎம் விஸ்வகர்மா' திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்துள்ளது. நாடு முழுவதும் 169 முக்கிய நகரங்களில் பிரதமரின் இ-பேருந்து சேவை திட்டத்தின்கீழ் 10,000 புதிய மின்சார பேருந்துகளை இயக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நேற்று நடந்தது. இதில் பல முக்கிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதுகுறித்து செய்தியாளர்களிடம் மத்திய தகவல், ஒலிபரப்பு துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் கூறியதாவது:

பிரதமரின் இ-பேருந்து சேவை திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக, 3 லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட 169 நகரங்கள் நாடு முழுவதும் தேர்வு செய்யப்படும். அந்த நகரங்களில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் 10,000 மின்சார பேருந்துகள் இயக்கப்படும். இத்திட்டத்தின் மதிப்பு ரூ.57,613 கோடி. இதில் ரூ.20,000 கோடியை மத்திய அரசு வழங்கும். இத்திட்டம் மின்சார பேருந்துகள் இயக்கத்துக்கு 10 ஆண்டுகளுக்கு ஆதரவு அளிக்கும். இத்திட்டம் மூலம் நகரப் பேருந்து சேவையில் 45,000 முதல் 55,000 நேரடி வேலைவாய்ப்புகள் உருவாகும்.



↑ டெல்லியில் நேற்று நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்துக்கு பிறகு, செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சர்கள் அஸ்வினி வைஷ்ணவ், அனுராக் தாக்குர். படம்: பிடிஐ

இவ்வாறு அவர் கூறினார்.

பாரம்பரிய கைவினை கலைஞர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் ரூ.13,000 கோடி மதிப்பிலான பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்துக்கும், பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

### 18 தொழில் கலைஞர்கள்

விஸ்வகர்மா ஜெயந்தியான செப்.17-ம் தேதி இத்திட்டம் தொடங்கப்படும் என சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி அறிவித்தார். அதன்படி இந்த திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தச்சு வேலை, படகு தயாரிப்பு, இரும்புக் கொல்லர், ஆயுதங்கள் தயாரிப்பு, சுத்தியல் மற்றும் உபகரணங்கள் தயாரிப்பு, பூட்டு தயாரிப்பு, பொற்கொல்லர், மண்பாண்டக் கலைஞர், சிற்பி, கல் உடைப்பவர், காலணி தைக்கும் கலைஞர், கொத்தனார், கூடை - பாய் - துடைப்பம் - தேங்காய் நார் மூலம் கால்மிதியடி தயாரிப்போர், பொம்மை கலைஞர்கள், முடிதிருத்துவோர், பூமாலை தயாரிப்பவர், சலவை தொழிலாளர், தையல் கலைஞர், மீன்பிடி வலை தயாரித்தல் ஆகிய 18 வகையான பாரம்பரிய தொழில்களை பாரம்பரியமாக அல்லது குரு-சிஷ்ய முறைப்படி மேற்கொள்ளும் கலைஞர்களுக்கு தேவையான உதவிகளை பிரதமரின் விஸ்வகர்மா திட்டம் வழங்கும்.

இவர்களுக்கு இத்திட்டம் மூலம் பிரதமரின் விஸ்வகர்மா சான்றிதழ், அடையாள அட்டையுடன் ரூ.1 லட்சம் முதல் ரூ.2 லட்சம் வரை 5 சதவீத தள்ளுபடி வட்டியில் கடன் உதவி வழங்கப்படும். இத்திட்டம் மூலம் திறன்களையும் அவர்கள் மேம்படுத்திக் கொள்ளலாம்.

### டிஜிட்டல் இந்தியா

டிஜிட்டல் இந்தியா விரிவாக்க திட்டத்தை ரூ.14,903 கோடியில் விரிவுபடுத்தவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம் 6.25 லட்சம் ஐ.டி. ஊழியர்களுக்கு எதிர்கால திறன்கள் திட்டத்தின்கீழ் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும். 2, 3-ம் நிலை நகரங்களில் 1,200 ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு உதவி செய்யப்படும்.

சுகாதாரம், வேளாண் துறையில் 3 செயற்கை நுண்ணறிவு மையங்கள் அமைக்கப்படும். 12 கோடி கல்லூரி மாணவர்களுக்கு சைபர் விழிப்புணர்வு பாடங்கள் நடத்தப்படும்.

தகவல் பாதுகாப்பு, கல்வி விழிப்புணர்வு திட்டத்தின்கீழ் 2.65 லட்சம் பேருக்கு தகவல் பாதுகாப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படும். தேசிய சூப்பர் கம்ப்யூட்டர் திட்டத்தின்கீழ் மேலும் 9 சூப்பர் கம்ப்யூட்டர்கள் சேர்க்கப்படும். ஏற்கெனவே 18 சூப்பர் கம்ப்யூட்டர்கள் பயன்பாட்டில் உள்ளன.

செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் பல மொழிகளின் மொழிபெயர்ப்பு கருவியான 'பாஷினி', 8-வது அட்டவணையில் உள்ள 22 மொழிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். தற்போது 10 மொழிகளுக்கு இது பயன்படுத்தப்படுகிறது.

டிஜிலாக்கர் மூலமான டிஜிட்டல் ஆவண சரிபார்ப்பு வசதி இனி குறு,சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கும் கிடைக்கும். 1,787 கல்வி நிறுவனங்களை இணைக்கும் தேசிய அறிவு வலையமைப்பு நவீனமாக்கப்படும்.

### விளையாட்டு துறை ஒப்பந்தம்

இந்தியா - ஆஸ்திரேலியா இடையே விளையாட்டு துறையில் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கும் மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்தது. இதன் மூலம் இருநாட்டு விளையாட்டு வீரர்களும் பயனடைவார்கள். இவை உட்பட மேலும் பல திட்டங்களுக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

### ரயில்வே திட்டம்

ரயில்வே அமைச்சகத்தின் 7 திட்டங்களை ரூ.32,500 கோடி மதிப்பில் மேற்கொள்ளவும் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் மூலம் 9 மாநிலங்களில் 35 மாவட்டங்களில் 2,339 கி.மீ. தூரத்துக்கு பல வழித்தடங்கள் அமைக்கப்படுகின்றன. சரக்கு போக்குவரத்துக்கு இந்த வழித்தடங்கள் மிக முக்கியமானவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனந்த ஜோதி
+
வாழ்வு இனிது
உள்ளே...

### சுயஉதவி குழுவினரின் தயாரிப்புகளை விற்க விரைவில்

# 'மதி சந்தை' ஆன்லைன் விற்பனை தளம்

### ● வளர்ச்சி குழு ஆலோசனை கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் தகவல்

● **சென்னை**

தமிழகத்தில் இந்த ஆண்டு புதிதாக 10 ஆயிரம் சுயஉதவி குழுக்கள் உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு சுழல் நிதி வழங்க ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சுயஉதவி குழுவினரின் தயாரிப்புகளை விற்க, 'மதி சந்தை' இணையவழி விற்பனை தளம் விரைவில் உருவாக்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழகம் முழுவதும் மாவட்டங்கள் அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு குழுவின் 3-வது கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நேற்று நடந்தது. இக்கூட்டத்தில் முதல்வர் பேசியதாவது:

எந்த திட்டம் ஆனாலும், தொடர்ந்து கண்காணித்துக் கொண்டே இருந்தால்தான் தொய்வின்றி தொடரும். தீன்தயாள் அந்தியோதயா யோஜனா - தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்புக்காக 2023-24-ல் புதிதாக 10 ஆயிரம் சுயஉதவி குழுக்கள் உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு சுழல் நிதி வழங்க ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

#### நிதி ஒதுக்கீடுகள்

மேலும், 5 ஆயிரம் சுயஉதவி குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.75 கோடி, 3 ஆயிரம் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு வறுமை நிலை குறைப்பு நிதியாக ரூ.7.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 10 ஆயிரம் புதிய சுயஉதவி குழு உறுப்பினர்களுக்கு அடிப்படை பயிற்சி, ஊக்குநர், பிரதிநிதிகளுக்கு பயிற்சி வழங்க ரூ.3.30 கோடி, 12,287 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் 388 வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் அலுவலக நிர்வாகிகளுக்கு ஆளுமை, நிதி மேலாண்மை குறித்த புத்தாக்க பயிற்சி வழங்க ரூ.24.96 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பண்ணை வாழ்வாதார பணிக்கு ரூ.60.27 கோடி, பண்ணை சாரா வாழ்வாதார பணிக்கு ரூ.18.64 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



#### விற்பனை அங்காடிகள்

மகளிர் சுயஉதவி குழுக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக 2022-23-ல் நடந்த கண்காட்சிகளில் 3,528 சுயஉதவி குழுக்கள் ரூ.3.75 கோடி அளவுக்கு விற்பனை செய்துள்ளன. மாநிலம் முழுவதும் முக்கிய இடங்களில் 137 விற்பனை அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளன. முறையான பேக்கிங், தயாரிப்புகளை தரப்படுத்த மதி வணிக முத்திரை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2022-23-ல் சுயஉதவி குழுக்களுக்கு வங்கிக்கடன் வழங்க ரூ.25 ஆயிரம் கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 4.49 லட்சம் குழுக்களுக்கு ரூ.25,642 கோடி வழங்கி சாதனை படைக்கப்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் கடன் இணைப்பு வழங்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ.45 ஆயிரம் கோடியை தாண்டி ரூ.47,034 கோடி வழங்கி சாதனை படைத்துள்ளது.

இந்த 2023-24-ம் ஆண்டு வங்கிக் கடன் இணைப்பு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ.30 ஆயிரம் கோடியில், கடந்த ஜூன் 30 வரை ரூ.5,644 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதை மேலும் அதிகரிக்க வேண்டும். மேலும், சுயஉதவி குழுக்களின் தயாரிப்புகளை விற்க, 'மதி சந்தை' என்ற இணையவழி விற்பனை தளம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குழுக்களின் உற்பத்தி பொருட்களை அவர்களுக்குள்ளும், பிற பெரும் வணிக நிறுவனங்கள் மூலமாகவும் விற்க, மாநில, மாவட்ட அளவில் வாங்குவோர் - விற்போர் சந்திப்பு நடத்தப்படும்.

#### 'மதி எக்ஸ்பிரஸ்' வாகனங்கள்

இதுதவிர, உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்தவும், விற்கவும் முக்கிய சுற்றுலா தலங்களில் 'மதி அங்காடிகள்' நிறுவப்படும். பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக 'மதி எக்ஸ்பிரஸ் வாகனங்கள்' வழங்கப்பட உள்ளன. சுயஉதவி குழுக்களால் இயக்கப்படும் 'மதி தினை உணவகங்கள்', மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் அமைக்கப்பட உள்ளன.

முதல்வரின் காலை உணவு திட்டம் விரிவாக்கப்பட்டு, மகளிர் மேம்பாட்டு நிறுவன சுயஉதவி குழு உறுப்பினர்கள் பங்கேற்பு மூலம், தமிழகத்தின் அனைத்து கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகளில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் செயல்படுத்தப்படும்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மூலம் சுகம்ய பாரத் அபியான் (தடையற்ற சூழலை உருவாக்குவதற்கான இயக்கம்) திட்டத்துக்கு சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அனைத்து மக்களுக்கும் நன்மை தரும் திட்டங்களை சிறிதும் தாமதமின்றி செயல்படுத்தி, திட்டத்தின் பயன் மக்களை முழுமையாக சென்றடைய துறை தலைவர்கள், அரசு அலுவலர்கள் முழு மனதுடன் செயல்பட வேண்டும். இந்த ஆலோசனை கூட்டத்தில் நீங்கள் பகிரும் கருத்துகளை நான் கேட்டு தெரிந்து கொண்டு நிச்சயம் அதற்குரிய நடவடிக்கை எடுப்பேன்.

இவ்வாறு முதல்வர் பேசினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், சாத்தூர் ராமச்சந்திரன், உதயநிதி ஸ்டாலின், மா.சுப்பிரமணியன், எம்.பி.க்கள் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், ஆ.ராசா, சு.திருநாவுக்கரசர், திருமாவளவன், நவாஸ்கனி, எம்எல்ஏக்கள் வி.ஜி.ராஜேந்திரன், எழிலன், அசன் மவுலானா, செங்கோட்டையன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, துறைகளின் செயலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### ஸ்ரீபெரும்புதூர் அருகே சிப்காட் தொழிற்பூங்காவில்

# இந்தியாவின் முதல் ட்ரோன் சோதனை மையம்

## டிட்கோவுடன் 4 நிறுவனங்கள் இணைந்து அமைக்கின்றன

**சென்னை**

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் 4 நிறுவனங்கள் இணைந்து ஸ்ரீபெரும்புதூர் அருகே சிப்காட் தொழிற்பூங்காவில் இந்தியாவின் முதல் ட்ரோன் சோதனை மையத்தை அமைக்க இருப்பதாக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மத்திய அரசின் பாதுகாப்பு உள்கட்டமைப்பு சோதனை திட்டத்தின் கீழ் (டிடிஐஎஸ்), இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த ஆளில்லா விமான (ட்ரோன்) சோதனை மையத்தை அமைக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) திட்டமிட்டது. மத்திய அரசின் மானியத்துடன் இத்திட்டத்தை செயல்படுத்த டிட்கோ ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளியை கோரியது.



டி.ஆர்.பி.ராஜா

### ரூ.45 கோடி மதிப்பீடு

அதன் அடிப்படையில், கெல்டிரான், சென்ஸ் இமேஜ், ஸ்டாண்டர்டு டெஸ்டிங் அண்ட் காம்ப்ளையன்ஸ் மற்றும் அவிகூஷா ரீடெய்லர்ஸ் ஆகிய 4 நிறுவனங்கள் டிட்கோவுடன் இணைந்து ரூ.45 கோடி மதிப்பீட்டில் ட்ரோன் சோதனை மையத்தை அமைக்க உள்ளன. இந்த சோதனை மையம், ஆளில்லா விமானத்தின் ஆராய்ச்சி, வடிவமைப்பு, மேம்பாடு, உற்பத்தி மற்றும் சோதனைகளுக்குத் தேவையான பல்வேறு வசதிகளை ஒரே இடத்தில் சர்வதேச தரத்தில் வழங்கும்.

இந்த சோதனை மையம், ஸ்ரீபெரும்புதூர் அருகே வல்லம் வடகாலில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் சுமார் 2.3 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ளது. ஆளில்லா விமான உற்பத்தியில் தமிழகம் சர்வதேச மையமாக திகழவும், பாதுகாப்புத் துறையில் இந்தியாவின் தற்சார்புத் தேவையைப் பூர்த்தி செய்யவும் இச்சோதனை மையம் வழிவகுக்கும்.

இந்தியாவின் முதல் பொது ஆளில்லா விமான சோதனை மையம் தமிழகத்தில் அமைய இருப்பது, வான்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்திச் சூழலில் உயரிய இடத்தை தமிழகம் அடைய வேண்டும் என்ற முதல்வர் மு.க. ஸ்டாலினின் அர்ப்பணிப்புக்கு எடுத்துக்காட்டு.

வான்வெளி மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை தொடங்குவதற்கு விருப்பமான இடமாக தமிழகத்தை மாற்ற இந்த சோதனை மையம் உதவும். இத்துறை மேலும் வளர தேவையான நடவடிக்கைகளை எடுப்பதில் நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். இம்முயற்சிகளுக்கான பலன்கள் விரைவில் கிடைக்கும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

வியாழன், ஆகஸ்ட் 17, 2023

# அமிலத் தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!

இந்தியத் தலைநகர் டெல்லியில் கடைகளில் அமில விற்பனைக்குத் தடை விதிக்க டெல்லி உயர் நீதிமன்றம் மறுத்திருப்பது, அமில வீச்சு பாதிப்புக்கு உள்ளானவர்களையும், அவர்களுக்கு ஆதரவான செயற்பாட்டாளர்களையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

அமில வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளானவரும் அதிலிருந்து மீண்டுவந்து, அமில வீச்சால் பாதிக்கப்பட்ட பிற பெண்களுக்கான உதவிகளைச் செய்துவரும் செயற்பாட்டாளருமான ஷாஹீன் மாலிக், டெல்லியில் அமில விற்பனைக்குத் தடை விதிக்க வேண்டும் என பொதுநல மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை ஜூலை 27 அன்று விசாரித்த டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதிகள் சதீஷ் சந்திர சர்மா, சந்தீப் நருலா அமர்வு, சட்டப்படி அனுமதிக்கப்பட்ட காரணங்களுக்காகவும் அமிலம் பயன்படுத்தப்படுகிறது எனக் கூறி மாலிக்கின் கோரிக்கையை ஏற்க மறுத்துள்ளது. அதே நேரம் சட்டவிரோதமாகவும் உரிய விதிகளைப் பின்பற்றாமலும் அமில விற்பனையில் ஈடுபடுவோர் அல்லது அமிலத்தைத் தவறான காரணங்களுக்காகப் பயன்படுத்துவோருக்குக் கடுமையான தண்டனைகளை விதிக்க வேண்டும் என்று அரசை வலியுறுத்தியுள்ளது. அத்துடன் அமில விற்பனையை முற்றிலும் தடை செய்வதால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்த ஆய்வை மேற்கொள்ள டெல்லி அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

உச்ச நீதிமன்றம் 2013இல் வெளியிட்ட உத்தரவின்படி, அமில விற்பனையில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் முறைப்படி உரிமம் பெற்றிருக்க வேண்டும். அமிலம் வாங்குபவர்களின் அடையாள ஆவணங்களையும் அமிலத்தை வாங்குவதற்கான காரணத்தையும் பதிவுசெய்ய வேண்டும். ஆனால், மனித உரிமைச் சட்ட வலைப்பின்னல் என்னும் அரசுசாரா நிறுவனம் 2020இல் நடத்திய கணக்கெடுப்பின்படி, டெல்லியில் பல்வேறு கடைகள் இதுபோன்ற விதிகளைப் பின்பற்றாமல் அமில விற்பனையில் ஈடுபட்டுவருவதை அம்பலப்படுத்தியது.

தேசியக் குற்ற ஆவணக் காப்பகத் தரவுகளின்படி, 2020இல் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் 182 அமில வீச்சுத் தாக்குதல்கள் நடைபெற்றன; 2021இல் இந்த எண்ணிக்கை 176ஆகக் குறைந்திருக்கிறது. ஆனால், 2018 முதல் 2021 வரை, டெல்லியில் மட்டும் 32 அமில வீச்சுத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. 2020இல் இரண்டு தாக்குதல்கள் மட்டுமே நடைபெற்றிருந்த நிலையில் கரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட அடுத்த ஆண்டிலேயே இந்த எண்ணிக்கை ஒன்பதாக அதிகரித்திருப்பது அமில விற்பனை தொடர்பான விதிமுறைகள் அமல்படுத்தப்படுவதில் நிலவும் போதாமைகளை உணர்த்துகிறது. கடந்த மார்ச் மாதம் டெல்லியில் 17 வயதுச் சிறுமி அமில வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளானது குறிப்பிடத்தக்கது.

வீடுகளிலும் அலுவலகங்களிலும் கழிப்பறையைச் சுத்தம் செய்வதற்காக அமிலம் பயன்படுத்தப்படுகிறது. எனினும், இது போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்கு அமிலத்துக்கு மாற்றாக வேறு ஆபத்தில்லாத பொருள்களைப் பயன்படுத்த முடியும் என்பதைச் செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த ஆண்டு டெல்லி மாநகராட்சி, கழிப்பறைகளைச் சுத்தம் செய்ய அமிலத்தைப் பயன்படுத்துவதைத் தடை செய்தது ஒரு முக்கியமான நகர்வு.

சில அத்தியாவசியத் தேவைகளைக் கருத்தில்கொண்டு, அமில விற்பனை தொடர அனுமதிக்கும் அரசும் நீதிமன்றமும் அதனால் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதைத் தமது தலையாயக் கடமையாகக் கருத வேண்டும். நடைமுறையில் உள்ள சட்டங்களும் விதிமுறைகளும் அனைவராலும் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். தேவைப்பட்டால் புதிய சட்டங்களும் விதிகளும் பிறப்பிக்கப்பட வேண்டும். அமிலத் தாக்குதல்கள் இல்லாத இந்தியாவை உருவாக்குவது அனைவருக்கும் உள்ள பொறுப்பு.



↑ கனடாவில் நடைபெற்ற காவல் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாடு காவல் துறை வீரர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

### காவல் துறையினருக்கான சர்வதேச போட்டி

# 41 பதக்கங்கள் குவித்தனர் தமிழக போலீஸார்

**சென்னை**

கனடா நாட்டின் வின்னிபெக்கு நகரில் காவல் மற்றும் தீயணைப் புத் துறையினருக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் நடை பெற்றன. சுமார் 50 நாடுகளிலிருந்து 8,500-க்கும் அதிகமான காவல் மற்றும் தீயணைப்புத் துறை வீரர் கள் கலந்து கொண்ட இந்த தொட ரில் தமிழ்நாடு காவல் துறை தட கள அணியைச் சேர்ந்த காவல் கண்காணிப்பாளர் ஏ. மயில் வாகனன், காவல் ஆய்வாளர்கள் ராஜேஸ்வரி, எஸ். சரவணப் பிரபு, கே. கலைச்செல்வன், ஆர்.சாம் சுந்தர், என்.விமல் குமார், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் வி. கிருஷ்ணமூர்த்தி, கே.பாலு, தலைமை காவலர்கள் பி.சந்துரு, எஸ்.சுரேஷ்குமார், சி.யுவராஜ், டி. தேவராஜன், மகளிர் தலைமை காவலர்கள் எம்.லீலாஸ்ரீ, ஆர். பிரமிளா, டி. தமிழரசி ஆகிய 15 பேர் பல்வேறு போட்டிகளில் பொதுப்பிரிவில் பங்கேற்று, 15 தங்கம், 11 வெள்ளி மற்றும் 15 வெண்கலம், என மொத்தம் 41 பதக்கங்களை வென்றனர். வெற்றி பெற்றவர்கள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல் துறை கூடுதல் இயக்குநர் (ஆயுதப்படை) எச். எம். ஜெயராம் ஆகியோர் உடனிருந்தனர்.

### இந்தியாவில் முதன்முறையாக

# சென்னையில் இரவு நேர கார் பந்தயம்

## ● டிசம்பர் 9, 10-ம் தேதிகளில் நடைபெறுகிறது

(C) KSL Media Ltd

**● சென்னை**
பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் (CMDA), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ரேஸிங் புரோமோஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியவை இணைந்து 'சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்' என்ற பெயரில் கார் பந்தய போட்டியை சென்னையில் நடத்த உள்ளனர்.

எஃப் 4 இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேஸிங் லீக் ஆகியவை வரும் டிசம்பர் 9 மற்றும் 10-ம் தேதிகளில் சென்னை தீவுத் திடல் மைதானத்தில் 3.5 கிலோ மீட்டர் சுற்றளவில் மின்னொளியில் இரவு நேர போட்டியாக நடத்தப்பட உள்ளது. இதன் மூலம் இந்த போட்டி இந்தியா மற்றும் தெற்கு ஆசியாவில் இரவு நேரத்தில் சாலையில் நடத்தப்படும் முதல் கார் பந்தய போட்டி என்ற பெருமையை பெற உள்ளது. இந்த போட்டியில் மொத்தம் 6 அணிகள் கலந்து கொள்கின்றன. ஒவ்வொரு அணியிலும் 4 டிரைவர்கள் இருப்பார்கள். இதில் 2 இந்திய வீரர்கள், 2 வெளிநாட்டு வீரர்கள் அடங்குவார்கள். மேலும் ஒலிம்பிக் விதிமுறைகளின் படி ஒரு வீராங்கனையும் இருப்பார்.



↑ 'சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்' என்ற பெயரில் கார் பந்தய போட்டி சென்னையில் நடைபெற உள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த போட்டிக்கான அறிமுகக் கூட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, இந்திய மோட்டார் ஸ்போர்ட்ஸ் கிளப்களின் கூட்டமைப்பு தலைவர் அக்பர் இப்ராஹிம், ஆர்பிபிஎல் அமைப்பின் தலைவர் அகிலேஷ் ரெட்டி, இயக்குனர்களான அர்மான் இப்ராஹிம், அபிநந்தன் ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியின் போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் பார்முலா ரேஸ் (ஆர்பிபிஎல்) அமைப்பினருக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த போட்டிக்காக தமிழக அரசு ரூ.42 கோடி நிதி வழங்குகிறது. மேலும் சாலை கட்டமைப்பு, போட்டி பணிகளுக்காக தனியார் பங்களிப்பாக சுமார் ரூ.200 கோடி வரை செலவிடப்பட உள்ளதாக போட்டி அமைப்பார்கள் தெரிவித்தனர். இந்த போட்டியை 3 ஆண்டு காலத்துக்கு நடத்துவதற்கான உரிமத்தை ஆர்பிபிஎல் பெற்றுள்ளது. போட்டிக்கான பாதை தீவுத் திடல் மைதானம், போர் நினைவிடம் மற்றும் நேப்பியர் பாலம் முழுவதும் நீட்டிக்கப்படும். 3.5 கிலோ மீட்டர் தூரத்தை கொண்ட இந்த பாதையில் 19 கார்னர்கள், பல வளைவுகள் ஏற்படுத்தப்படும்.

EVA STALIN